# 11B செயல்முறைப் பகுதி

## 1. தங்கள் பாடத் திட்டமிடல் பற்றி இரண்டு பா.மொ.க ஆசிரியர்களின் கருத்துகள்

ட்ராகனா டிமிற்றியேவிச்

ட்ராகனா டிமிற்றியேவிச் பெல்கிறேட் / சேர்பியா வைச் சேர்ந்தவர். 1999 முதல் சூரிச் மாநிலத்தில் பா.மொ.க சேர்பியன் ஆசிரியராகப் பணிசெய்து வந்துள்ளார்.

அரையாண்டு திட்டமிடலுக்காக, நான் பின்வருவனவற்றை ஓர் அட்டவணை வடிவமாகப் பட்டியலிடுகிறேன்:

- ஒவ்வொரு வகுப்புக்கான / பிரிவுக்கான பொதுவான இலக்குகள்

- ஒவ்வொரு மாதம் மற்றும் கிழமைக்கான (ஒவ்வொரு பிரிவுக்கான) கருப்பொருளும் தொடர்புற்ற திட்டமிடப்பட்ட பாடங்களும்

- பயன்படுத்தவுள்ள கற்பித்தல் நெறிமுறைகள், சமூக வடிவங்கள், ஊடகம்.

  இவ்வாறு செய்யும்போது, திட்டமிடற் செயற்பாட்டிலே எங்கள் பண்பாட்டிலிருந்து எங்கள் கொண்டாட்டங்கள், விடுமுறைகள், வேறு இன்றியமையாத கூறுகள் ஆகியனவற்றை நான் சேர்ப்பதற்கு இலகுவாக இருக்கும்.

மாதாந்தத் திட்டமிடல் அல்லது கருப்பொருள் திட்டமிடல், ஒரு குறிப்பிட்ட தலைப்பின் (தகைமை-அடிப்படை, இலக்குகளின் பொருத்தமான சீரமைவு, உள்ளீடுகள், கடினங்கள் அடிப்படையில் மேலேயுள்ள உருக்காட்டல்களை நான் குறுக்கி உறுதிப்படுத்துகிறேன். இலக்குகளுக்கும் உள்ளடக்கங்களுக்கும் நான் சேர்பியன் பா.மொ.க திட்டத்தையும் சூரிச்(HSK) கட்டமைப்புப் பாடவிதானத்தையும் (இது ஜெர்மன் பேசும் சுவிற்சர்லாந்தல் பயன்படுத்தப் படுகிறது) பார்க்கும்படி நான் கூறுவேன். பெரும்பாலும், நான் உண்மையான முன் அனுபவத்தினையும் மாணவர்களின் தேவைகளையும் ஆர்வங்களையும் தழுவவே முயற்சிக்கிறேன். என்னுடைய கற்பித்தல் அணுகுமுறை சுழல்கோட்பாட்டைப் பின்பற்றுவதே. ஆரம்ப, இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் உள்ளடக்கங்களும் இலக்குகளும் மீள் பார்வைக்கு உட்படும், நோக்கில் விரிவாக்கப்பட்டு மிகுந்த சவால்களுக்கிடையில் கற்பிக்கின்றேன்.

இலக்குகள் அடையப்பட்டுள்ளனவா என்பதனை கற்றல் பக்கதுணையாலும் வழிகாட்டும் செயற்பாட்டாலும் (கண்காணிப்புகள், கலந்துரையாடல்கள், துணை) பகுதியாக வாய்வழி மற்றும் எழுத்து மூலமான மதிப்பீடுகளூடாக மதிப்பிடப்படும். இவை தேர்வுகளை போலல்லாமல் சிறுமதிப்பீடுகள் போலவே அமையும் இதனால் தேர்வு தொடர்பான அழுத்தம் குறைக்கப்படுகிறது.

என் பா.மொ.க மாணவர்களுக்கு சேர்பியாவின் கற்பித்தல் கருவிகளையே நான் தழுவ வேண்டியுள்ளது, எ.டு. குறைந்தது தொடக்கத்திலேனும், ஒப்படைகளை எளிமையாக்கவும் பிள்ளைகளுடைய சொற்கோவைக்கு ஏற்றபடி எழுத்துருக்களைச் சரிசெய்யவும் நான் சிறிலிக் வரிவடிவத்தை இலத்தீன் வரிவடிவுக்கு மாற்றியமைத்தேன். இத்தகைய தழுவல்கள் மற்றும் எதிர்பார்ப்புகளின் குறைப்புகளின் பின்னரே பிள்ளைகள் கருவிகளுடன் திறமையாகக் கற்றல் வேலையைச் செய்ய முடிகிறது.

நடியா எல் திகானி மஹ்மூத்

நடியா எல் திகானி மஹ்மூத் சூடானைச் சேர்ந்தவர். இவர் 1992 முதல் இலண்டனில் வாழ்ந்துவருகிறார் வழமையான மற்றும் அறிமுக வகுப்புகளிலும் பா.மொ.க அரபிக் ஆசிரியராகப் பணி செய்கிறார்.

பாடத் திட்டமிடலானது மாணவர்கள் என்ன கற்க வேண்டும், எவ்வாறு வடிவமைக்க வேண்டும், கற்றல் செயற்பாடுகளுக்கு எவ்வாறு வழிகாட்டி பக்கத்துணை செய்யவேண்டும், எவ்வாறு கற்றல் வெற்றியை நான் கணிப்பீடு செய்யலாம் என்பவற்றை வரையறைசெய்ய துணைசெய்கிறது.

விதிப்படி, நான் 2-3 கிழமைகளுக்கு முன்னரே என் பாடங்களை நான் திட்டமிடுவேன். அவ்வாறு செய்யும்போது, நான் பாடவிதானத்தைப் பார்ப்பேன். என் திட்டமிடல் பின்வரும் அடிப்படைகளை உட்படுத்துகிறது: இலக்குகள், மொழித் தகைமை, மொழிப் பண்புகள் (சொற்கோவை, முதலியன), பிற செயற்பாடுகள். எல்லா மாணவர்களுக்கும் வேறுபட்ட கற்றல் பாங்குகளுக்கும் போதுமான பக்கத்துணை செய்ய பல் வகைக் கற்பவர்களின் (கேள்வி, காட்சி, இயக்கவியல்) தேவைகளை தீர்த்துவைக்க நான் மிகவும் முயற்சி செய்கிறேன்.

என் திட்டமிடல் கற்றல் கணிப்பீடு தொடர்பான வேறுபட்ட வழிகள் பற்றிய கருத்தினையும் உள்ளடக்குகிறது. இது கற்றல் உண்மையாகவே நடைபெற்றுள்ளது என்பதை உறுதிப்படுத்தவும், ஒரு தனிப்பட்ட மாணவர் அல்லது முழு வகுப்பு தொடர்பாக ஏதாவது மீளாய்வு செய்யவும் ஆழமாக ஆராயவும் வேண்டுமா என்பதை மதிப்பிடவும் என்னை இயலுமைசெய்கிறது.

III

## 2. சுவிற்சர்லாந்திலிருந்து மூன்று பா.மொ.க ஆசிரியர்கள் தம்முடைய இளம் தொழில்சார் தோழர்களுக்கு எதனைப் பரிந்துரைக்கவுள்ளனர்

(இயல் 1B.5 இல் வலேரியா பொவினாவின் முன்னூட்டற் குறிப்புகளையும் பார்க்கவும்)

சக்கினே கொச்(சூரிச்சில் துருக்கிஷ் பா.மொ.க ஆசிரியர்)

மாணவர்கள் பண்பாடுகள் மொழிகள் தொடர்பான முரண்பாட்டில் தம்மை உட்படுத்தாமலிருப்பதை உறுதிப்படுத்த வழமையான சுவிஸ் பள்ளி அமைப்பின் ஆசிரியர்களுடன் தொடர்புகொள்ளும்படி பரிந்துரைக்கப்படுகிறது. மொழி கற்பித்தலிலேயே இன்றியமையாததாக இருக்கவேண்டும். முதலாம் வகுப்பினர் இரு மொழிகளிலும் ஒரே பாடங்களைக் கற்கவேண்டும் எ.டு. ஒரே எழுத்துகள் அல்லது ஒரே கதைகள், முதலியன.

ட்ராகனா டிமிற்றியேவிச் (சூரிச்சில் சேர்பியன் பா.மொ.க )

என்னுடைய இளைய தொழில்சார் தோழர்களுக்கு, தங்கள் தேசிய பாடவிதான இலக்குகளையும் உள்ளடக்கங்களையும் புலம்பெயர் நாடுகளின் பாடவிதானங்களுடன் (சுவிற்சர்லாந்தில்: கட்டமைப்புப் பாடவிதானம் HSK) இணைக்கவேண்டும் என நான் வலுவாகப் பரிந்துரை செய்கிறேன். மொழி ஊக்குவிப்பும் இன்றியமையாததாகும், புலம்பெயர் நாட்டின் மொழியுடன் (மாணவர்கள் பெரும்பாலும் இம்மொழியில் நல்ல திறமை உடையவர்கள்) இணைதல், அதனுடன் புலம்பெயர் நாட்டின் பண்பாடு மற்றும் உண்மையுடனான குறிப்புகள். இவ்வழியில், மாணவர்கள் உள்ளடக்கத்தினை நன்றாக விளங்கிக்கொள்வர், அத்துடன் வகுப்பறைக் கற்பித்தல் உகப்பாக உருக்காட்டுவதுடன் அவர்களுடைய இருபண்பாட்டு, இருமொழித் தகைமைகளை முன்னேற்றுவர்.

நெக்ஸ்மியே மெஹ்மெதாஜ் (சுவிற்சர்லாந்து ஜுரா மாநிலத்தில் அல்பானியன் பா.மொ.க )

திட்டமிடலிலும் கற்பித்தலை வழங்குதலிலும் மாணவர்களின் உண்மையான மேம்பாட்டையும் அவர்கள் முதல் மொழியில் திறமையினையும் அடையாளம் காணுதல் இன்றியமையாததாகும்.

கற்பித்தல் இலக்குகள் எப்போதும் தெளிவாகவும் விளக்கமுடையதாகவும் இருக்கவேண்டும். உண்மையில் மாணவர்கள் ஏதாவது கற்றிருப்பார்களாயின் அதனை இந்த வழியிலேயே நான் மதிப்படலாம்.

தெளிவான கட்டமைப்புடனும் வெளிப்படையான திட்டமிடலுடனும் கடினங்களையும் சிக்கல்களையும் முடிந்த அளவு தவிர்த்துக்கொள்ளவும்.

எல்லா மாணவர்களும், வலுவற்றவர்களுட்பட, எவ்வித விதிப்புமின்றி இணைக்கப்பட வேண்டும் சேர்க்கப்பட வேண்டும். ஒவ்வொருவரும் பாராட்டுகின்ற, உருவாக்குகின்ற, குறிப்பான பின்னூட்டலைப் பெறவேண்டும்.

---

## 3. வருடாந்தத் திட்டமிடல் கட்டமைப்பு (வரைபு)

நெக்ஸ்மியே மெஹ்மெதாஜ் கொசோவோவிலிருந்து வருகிறார். அவர் சுவிற்சர்லாந்து ஜுரா மாநிலத்தில் 1993 தொடக்கம் வாழ்ந்துவருகிறார். அங்கு அவர் பா.மொ.க வினைக் கட்டியெழுப்பி தற்போது பா.மொ.க அல்பானியன் கற்பித்தலை நெறிப்படுத்திவருகிறார்.

ஒரு கல்வியாண்டிற்கான திட்டமிடல் (வரைபு) அமைப்புக்கு நான் முதலில் இரு வகையான பாடங்களை வேறுபடுத்திக் காட்டுகிறேன்:

a) புதிய தகைமைகளைக் (75%) கையகப்படுத்த வடிவமைக்கப்பட்ட பாடங்கள் மற்றும்

b) பெரும்பாலும் பாடங்கள் என்ன கற்கப்பட்டனவோ (25%) அவற்றை நெருக்கமான பகுப்பாய்வு, விரிவாக்கல், மீட்டல் மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாட-வாரியாக, தேவைப்படும் காலத்திட்டத்தினை ஒதுக்கீடு செய்வதில் நான் பின்வரும் விடயங்களை வேறுபடுத்துகிறேன்:

a) பண்பாட்டுக் கல்வி, தொடர்பாடல் (பல்பண்பாட்டுப் பகுதிகள் உட்பட): முறையே, 60% அல்லது 48 பாடங்கள்

b) மொழிக் கல்வி (இலக்கணக் கட்டமைப்புகள், சொற்களஞ்சியம், முதலியன): முறையே, (40%) அல்லது 32 பாடங்கள். மொழியியல் பகுதிகள் (கேட்டு உள்வாங்கல், படித்து உள்வாங்கல், பேசுதல், எழுதுதல்) இரு பெரும் பரப்புகளிலும் இணைக்கப்பட்டுள்ளன.

### வருடாந்தத் திட்டமிடல் கட்டமைப்பு(வரைபு)

| காலத்திட்டம்:<br>80 பாடங்கள்<br>(40 கிழமைகள் 2 பாடங்களாக) | நிலை I<br>(1-3 ஆம் வகுப்பு) | நிலை II<br>(4-6 ஆம் வகுப்பு) | நிலை III<br>(7-9 ஆம் வகுப்பு) |
|---|---|---|---|
| புதிய தகைமைகளைக் கையகப்படுத்தல் | 64 பாடங்கள் (32 x 2) | 64 பாடங்கள் (32 x 2) | 64 பாடங்கள் (32 x 2) |
| நெருக்கமான பகுப்பாய்வு, விரிவாக்கல், திரும்பக்கூறல் மற்றும் பயன்பாடு | 16 பாடங்கள் (8 x 2) | 16 பாடங்கள் (8 x 2) | 16 பாடங்கள் (8 x 2) |

## 4. அரையாண்டு திட்டமிடல் எடுத்துக்காட்டு

டானியெலா ஸ்ரெபனோவிச் சேர்பியாவின் பொஸரெவக்கைச் சேர்ந்தவர். அவர் ஸ்ருற்கார்ட்டில் 12 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். அங்கு அவர் பா.மொ.க வில் சேர்பியன் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

(இயல் 9B.1இல் எடுத்துக்காட்டைப் பார்க்கவும்)

| மாதம் | கருப்பொருள் | கீழ்ப்பிரிவு I (1 - 3 ஆம் வகுப்பு) | இடைநிலைப்பிரிவு II (4 - 6 ஆம் வகுப்பு) | மேற்பிரிவு III (7 - 9 ஆம் வகுப்பு) |
|---|---|---|---|---|
| செப்ரெம்பர் | தாய்நாடு தொடர்பான படங்கள் | • வாய்மொழித்தகைமைகள் சரிபார்த்தல்<br>• வாய்வழிப் பயிற்சிகள்<br>• தொடர்மாடி, வீடு, பள்ளி நாள்கள்<br>• போக்குவரத்து<br>• நாட்டார் பாடல்கள்<br>• கண்காணிப்பு, விவரிப்பு பற்றி பயிற்சி<br>• இலத்தீன், சிறிலிக் வரவடிவத்துக்கு அறிமுகம்<br>• மடல் எழுதுதல் பயிற்சி<br>• Gusan Kostic : September (பாடல், கவிதை, கவிஞர்)<br>• Lj Rsumovic : Au, sto je skola zgodna<br>• Dragan Lukic: Sta je otac? | • அறிக்கைகள் (வாய்வழி, எழுத்து) விடுமுறையில் நாங்கள்...<br>• குடும்ப வரலாறு, குடிபெயர்வு<br>• தாய்நாடு, அன்றும் இன்றும்<br>• இலக்கண முறைப்படி சரியாக எழுதுதல், ஒரிய எழுத்துகள், வேற்றுமை முடிவுகள், எங்கே? எங்கு?எதனுடன்? வாய்வழி எழுத்துவழி, அடிக்கடி பெருமளவு ஏற்படும் பிழைகள். இலத்தீன் சிறிலிக் வரவடிவத்துக்கு அறிமுகம்<br>• D. Erić: Domovina<br>• B. Nušić: தன்வரலாறு.<br>• உலகப்படத்தில்: நகரங்கள், ஆறுகள், மலைகள், வெந்நீரூற்றுகளை கண்டுகொள்க | • விடுமுறைகள் தொடர்பான அறிக்கைகள்<br>• P. Ugrinov: Stara porodična kuća<br>• வரலாறு, சமூக மற்றும் நிறுவன கூறுகள்<br>• சரியாக எழுத்துதல் பயிற்சி: புவியியல் சொற்கள்<br>• சுவிற்சர்லாந்திலும் சேர்பியாவிலும் வாழ்வு ஒப்பீடு<br>• உலகப்படத்தில்: நகரங்கள்,<br>• ஆறுகள், மலைகள்,<br>• வெந்நீரூற்றுகளை கண்டுகொள்க Ivo Andrić யார் எங்களுடைய பேரன்பேர்த்தியர் எங்கு அவர்கள் வாழ்ந்தனர்? குடும்ப மரப்படம், குடும்பத்தில் மிக அன்புள்ளவர் |
| ஒக்ரோபர் | குடும்ப மரம் | • ஒலிகள், சொற்கள், வாக்கியங்கள்<br>• குடும்பம், காணுதல்கள்<br>• நண்பர்கள், நட்பு<br>• பெண்பிள்ளைகள், ஆண்பிள்ளைகள்<br>• குடும்பம், விரிவுபட்ட குடும்பம்<br>• குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள்<br>• முதல் பாட நூலிலிருந்து படித்தல்<br>• நெடுங்கணக்கை உருவாக்கியவர், Vuk Stefanović Karadžić<br>• பழமொழிகள், பாடல்கள், நாப்பிரட்டிகள் | • தாய்நாடு – குறியீடுகள்<br>• குடும்ப உறவுகள், உறவு குடும்ப வரிசையில் ஆண், பெண்<br>• உறுப்பினர்களின் பெயர்கள்<br>• "Pastir iz Tršića"எழுத்துருவுடன் செயற்படல்<br>• (விவரணச் சொற்கள்) புவியியலில், தாவரவியலில், முதலியன. | • சேர்பியா நாட்டுப் படத்துக்கு முன்னால்<br>• குடும்ப மரப்படம்<br>• பன்முகத் தன்மைக்குப் பாராட்டு<br>• "Pastir iz Tršića"எழுத்துருவுடன் செயற்படல்<br>• சிக்கல் வாக்கியங்கள்<br>• புகழ் பெற்ற இலக்கியம்<br>• நாப்புரட்டிகள், முதலியன<br>• பழமொழிகள், தொடர்கள்<br>• காவியம் காவிய நாட்டார் பாடல் பாகுபாடு |
| நவம்பர் | சேர்பியன் நெடுங் கணக்கும் அதை கண்டு பிடித்தவரும் | • சொற்களஞ்சிய வளர்ச்சி<br>• குடும்பம், தொழில்கள், பருவங்கள், நாளின் பகுதிகள்<br>• சிறிலிக் / இலத்தீன் எழுத்துப் பயிற்சி<br>• சுருக்கங்கள்<br>• முதல் பாடநூலிலிருந்து எழுத்துப் பயிற்சிகளுடன் செயற்படுதல்<br>• மொழியில் உருக்காட்டுதல்: ஜெர்மன் மொழியுடனான பொதுமைகளும் வேறுபாடுகளும்<br>• சேர்பியா- தலைநகர், குறியீடுகள், எங்கிருந்து என் பூட்டன்மார் வந்தனர்? | • Vuk Stefanović Karadžić: வாழ்வும் பணியும்<br>• பெயர்கள்: எண்ணக்கருவும் பொருளும், வகைகள்<br>• மீட்டுரைத்தல், சுருக்கம் தேவதைக் கதைகள்<br>• சேர்பியா - சுவிற்சர்லாந்து<br>• நிலப்பரப்பு ஒப்பீடு சேர்பியா - சுவிற்சர்லாந்து ஒரு<br>• சுற்றுலா - விடுமுறைத் திட்டங்கள்<br>• பால்கன்ஸ் வரலாற்றுக்கு முற்பட்ட மற்றும் பண்டைய காலங்களில் | • Vuk St.Karadžić – சேர்பியன் மக்களின் வாழ்வும் மரபும்<br>• நெடுங்கணக்கு எவ்வாறு நடைமுறைக்கு வந்தது? சேர்பியாவில் கல்வியறிவு<br>• கிறிஸ்தவம், சிறில், மெதொடியஸ் அறிமுகம்<br>• வேற்றுமைகள்: ஜேர்மனுடன் ஒப்பீடு<br>• சேர்பியன்களின் குடிபெயர்வு மற்றும் துருக்கிய பொறுப்பாள்கைகளுக்கு எதிர்ப்பு<br>• ஒப்ரெனோவிச் குடி<br>• விடுதலை மற்றும் கட்டற்றநிலைப் போர்<br>• தேசிய பூங்காக்கள், சூழல் |
| டிசெம்பர் | மரபுகள் - மக்களை இணைக்கும் ஒரு பாலம் | • வாக்கிய வகைகள் (அறிவித்தல், வினா, கட்டளை)<br>• கிழமை நாள்கள்<br>• மாதங்கள்<br>• நத்தார் விழா, நத்தார் மாலை, நத்தார் தாத்தா<br>• நத்தார் பாடல்கள் | • V. Ilić: «Zimsko jutro»<br>• வாய்வழி, எழுத்து விளக்கம்<br>• அடைகள், எண்ணக்கரு, பொருள், எண், பால், ஜெர்மனுடன் ஒப்பீடு<br>• Sv. Stefan<br>• நெமான்சிஸ் குடி<br>• முதலாவது சேர்பியன் அரசு உருவாக்கம்<br>• St. Karadžić<br>• நத்தார் மரபுகள், நத்தார் பாடல்கள் | • முதலாவது சேர்பியன் கிளர்ச்சி<br>• Milan Đ. Milićević<br>• Karađorđe(உருவப்படம்)<br>• புனித புரவலர், நம்பிக்கைகள், வழக்கங்கள், சமயக் கொண்டாட்டங்கள்<br>• சேர்பியாவிலும் சுவிற்சர்லாந்திலும் வாழ்வும் மரபுகளும்<br>• நத்தார் விடுமுறைகள்: நத்தார் மாலை |
| ஜனவரி | "அவன் ஒரு வழி இன்றி பயணப்படு கிறான். வழி அவன் பின்னாலே பிறக்கிறது." (Vasko Popa [St. Sava] ) | • வாய்வழித் தகைமைகளை மேம்படுத்தல், எ.டு. படங்கள் ஊடாக<br>• புனித சவாவின் குணங்களும் பணியும்<br>• புனித சவாவின் சங்கீதங்கள் | • நத்தார் விடுமுறைகளை அடிப் படையாகக் கொண்டு வாய்வழி எழுத்து எடுத்துரைப்புகள்<br>• «Nigde nebo nije tako lepo kao u<br>• நெமானஜிக் குடி 12-14 ஆம் நூற்றாண்டு<br>• துறவிமடங்கள் -பண்பாட்டு மையங்கள்<br>• புனித சவாவின் குணங்களும் பணியும்<br>• நாட்டார் பாடல் "Sveti Sava" | • பெயர்கள்: சொல் மற்றும் அமைப்பு (பால், எண், வேற்றுமை தொடர்பான மாற்றங்கள்)<br>• Rastko Nemanjić<br>• இலக்கியத்தில் புனிதர் சவா<br>• சேர்பியன் துறவிமடங்களும் கோயில்களும் |

## 5. எடுத்துக்காட்டு, துருக்கி பற்றிய கருப்பொருள் திட்டமிடல் (ஏறத்தாழ 4 கிழமைகள்)

சகினே கொச் துருக்கியைச் சேர்ந்தவர். ஐந்து ஆண்டுகளாக சூரிச் நகரில் வாழ்ந்தும் பா.மொ.க ஆசிரியராக பணியாற்றியும் உள்ளார்.

(இயல் 9B.4 இல் எடுத்துக்காட்டினைப் பார்க்கவும்)

| மட்டம் | பேசுதல் | படித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | கேட்லும் விளங்கிக்கொள்ளுதலும் | எழுதுதல் |
|---|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு | கலந்துரையாடலுக்கான தூண்டுதல்கள்: உங்கள் நகரம் பற்றி அறிக்கையிடுக! துருக்கியில் வேறு என்ன கண்டீர்களென்பதை நாட்டுப் படத்தில் காட்டிக் கூறுக! துருக்கிப் படங்கள் / நினைவுப் பொருள்களை விவரிக்குக. பேசுதற்குப் பிள்ளைகளை அழையுங்கள். அவர்களுடைய பிழைகளை கடைசியாகத் திருத்துங்கள். தாய்நாட்டுடன் உறவினை ஏற்படுத்துக. | துருக்கி பற்றி எளிமையான பந்திகளைப் படிக்கவும். உள்ளடக்கத்தை உள்வாங்குதல் முன்னுரிமை பெறும், உரத்துப் படிக்கும்போது, தெளிவுக்கும் துல்லியத்துக்கும் கண்காணிப்புச் செலுத்துங்கள். | துருக்கியின் கட்டற்றநிலை வரலாற்றினை விளக்குக. துருக்கியின் கொடி மற்றும் நாட்டுப்பண் ஆகியன பற்றி தகவல்கள் திரட்டி சுருக்கமாக எடுத்துரைத்தல் | துருக்கியில் பார்த்த நகரங்கள் பற்றிய எழுத்து அறிக்கை, முதலியன. குவிய குறிப்புகள்: கட்டமைப்பும் எழுத்துக் கூட்டலும். |
| இடைநிலைப் பிரிவு | சில இடங்களின் இயல்புகள் (உணவு, மலைகள், கட்டடங்கள் முதலியன). வேறுபட்ட இடங்களில் என்ன பட்டறிவைப் பெற்றீர்கள்? சுவிற்சர்லாந்துடன் ஒற்றுமைகளைச் சுட்டுக, தொடர்புகளை ஏற்படுத்துக. | துருக்கி பற்றி நூல்களைப் படித்து அது பற்றிய வினாக்களுக்கு விடைகூறுக. துருக்கியில் அன்றாட வாழ்வு பற்றி நூல்களில் படிக்கவும், சுவிற்சர்லாந்துடன் ஒப்பிடுக. சரியான ஒலிப்பு! | துருக்கிய நிழல் நாடகத்தைப் (Karagoztheater), பார்த்துவிட்டு இன்றயமையாத பாத்திரங்கள் மற்றும் மரபு பற்றி விளக்குக. | எழுத்தில் நிறைவடையாத ஒரு கதையினை நிறைவு செய்க. வினைகளைச் சரியாக இணைக்கும் இயலுமை. |
| மேற்பிரிவு | துருக்கியின் புவியியல் பண்புகள்: மலை வரைகள், பள்ளத்தாக்குகள், ஆறுகள், சம வெளிகள், கடல்கள் துருக்கியில் சுற்றுலா சுவிற்சர்லாந்துடன் ஒப்பீடு. நியாயப்படுத்தல்கள், வினாச்சொற்களின் பயன்பாடு. | துருக்கி பற்றி நூல்கள் படிக்கவும், எழுத்து மொழி ஒப்பீட்டளவில் விரிவாக. தகவல் படிப்பு மீண்டும் கூறப்பட்டது (நிகழ்வுகள், பாத்திரங்கள், நேரம்). திறவுக் குறிப்புகளையும் நீதியையும் அடையாளம் காண்க. | கவிதைகளைக் கேட்கவும் (எ.டு. "I hear Istanbul" ). முதன்மைக் கருப்பொருள், நிகழ்ச்சி, காலம், கவிஞர் பற்றிய தகவல் மற்றும் அவனுடைய / அவளுடைய இன்றியமையாமை. | வாய்வழி அறிக்கை ஏற்பாடு செய்து எடுத்துரைக்குக. தொடர்களையும் பழமொழிகளையும் பயன்படுத்துக, துணை-வாக்கியங்களை உருவாக்குக |

## 6. 1 – 6 ஆம் தரங்களுக்கு பாடத்திட்டமிடல் எடுத்துக்காட்டு

நெக்சாத் மாலொகு கீய்லானைச் (கொசொவா) சேர்ந்தவர். 1991 முதல் சூரிச் நகரில் வாழ்ந்துவருகிறார். அங்கு அவர் 1992 முதல் பா.மொ.க அல்பானியன் ஆசிரியராக பணியாற்றினார்.

(இயல் 4B.2 (1-9 தரங்கள்) மற்றும் 8B.3, முதலியனவற்றில் எடுத்துக்காட்டுகளைப் பார்க்கவும்)

| நேரம் | கீழ்ப்பிரிவு, முதலாம் வகுப்பு | கீழ்ப்பிரிவு, வகுப்புகள் 2 / 3 | இடை நிலைப்பிரிவு, வகுப்புகள் 4-6 |
|---|---|---|---|
| 5′ | மூன்று குழுக்களுடனும் தொடங்குக, வாழ்த்துகள் ஒப்படையை 2-3 மற்றும் 4-6 குழுக்களுக்கு விளக்குக | | |
| 8′ | முதலாம் தரம் எழுத்து ‹J›. அறிமுகம் ஒலிப்பு அடையாளம், எழுத்துவடிவம் ‹J, j›. | வகுப்புகள் 2 / 3: தலைப்பு: ‹நானும் மற்றவர்களும்›. ஒரு கூட்டாளியை நேர் காணல்: மாணவர்கள் இரு குழுக்களாக தங்கள் குடும்பங்கள் பற்றிய தகவல்களைப் பரிமாறுதல். | கருப்பொருள் வினைகள் இறந்த காலம். 20 வாக்கியங்களுடன் பணித்தாள். பணி: வினைகளுக்கு அடிக்கோடிடுக, எந்த இறந்தகாலம் பயன்படுத்தப்பட்டது என்பதைக் குறிப்பிடுக. |
| 8′ | பணித்தாளில் ‹J, j› உடன் நான்கு தனிப்பட்ட வேலைகள் | | |
| 10′ | பணித்தாள் சரிபார்த்தல்: J- சொற்களை மீளக் கூறுக. java,jata என்னும் சொற்களைத் தனியாக்குக. துணைவினை ‹jam›. Gjpa | | |
| 5′ | | நேர்காணப்பட்ட பிள்ளையின் குடும்பம் பற்றி எடுத்துரைப்பு. தனிப் படிப்புகள் "Ne familjen e Albanes" விளங்காத பந்திகளை அடையாளமிடுக | |
| 8′ | | | பணித்தாள் கட்டுப்பாடு: அல்பானியனிலும் ஜேர்மனிலும் இறந்தகாலப் பயன்பாடுகள் பற்றிய ஒப்பீடு. |
| 3′ | புதிய பணித்தாள் சரிபார்த்தல்: புதுப்பணி: J எழுத்துடன் 4 படங்கள் வர்ணம் தீட்டுக | | <Gjuha shqipe 3> இலிருந்து ஒரு பந்தியினைத் தெரிவுசெய்தல் (வினைச்சொற்களுக்கு நிறந்தீட்டுதல்) |
| 7′ | | "Familja e Albanes" படிப்பதால் வரும் சிக்கல்களைத் தெளிவுறுத்தல் கதையின் பகுதிகளை உரத்துப்படித்தல் படித்து உள்வாங்கல் பற்றிய உண்மை வினாக்கள். பணி: உங்கள் குடும்பத்தை வரைக. | |
| 15′ | இடைவேளை | | |
| 10′ | மாணவர்கள் ஒரு எளிமையான பந்தியினை படிக்கின்றனர். கடினங்கள் ஏற்படும்போது ஆசிரியர் துணைசெய்கிறார். | பணியைத் தொடர்தல் (மேலே பார்க்கவும்) | "Princi i lumtur" தனித் தனியாகப் படித்தல், எல்லா மாணவர்களும் உரத்துப் படிப்பதற்காக ஒரு பந்தியினை ஏற்பாடு செய்வர். |
| 20′ | குறிப்பிட்ட பயிற்சிப் படிவங்களுக்கேற்ப (பங்காளியுடன் அல்லது தனியாகப் பணி செய்தல்) சொல்வதெழுதுதலாக எழுத்துப் பயிற்சி (மேலே பார்க்கவும்) | வேறொரு பணித்தாளுடன் கற்பித்தல் கருவிகள் தொடர்பான ஒப்படைகளைச் செய்யவும். | மாணவர்கள் வட்டமாக இருப்பர், தாம் உருவாக்கிய பந்தி பற்றிப் பேசுவர். ஆசிரியர் கேட்டுக்கொண்டிருப்பார் வேண்டுமெனில், விளக்கங்களுடன் தலையிடுவார். |
| 3′ | மேலே குறிப்பிட்ட பணித்தாளைச் சரிபார்த்தல்: வீட்டுவேலை ஒப்படைகள்: சொல்வதெழுதுதல் பந்தியிலிருந்து சொற்களை கற்கவும். | | "Princi i lumtur" நூலின் ஆசிரியர் பற்றிய தகவலைப் படித்தல். உள்வாங்கல் மதிப்பீடாக பங்காளி நேர்காணல்கள். |
| 5′ | | எழுத்துரு பற்றிய கலந்துரையாடல், கொசோவா-சுவிற்சர்லாந்து குடும்ப வாழ்வு பற்றிய ஒப்பீடு செய்க. வீட்டுவேலை ஒப்படை: குடிபெயர்வுக்கான நோக்கங்கள் பற்றிய விவரத்திரட்டுகள் | |
| 3′ | | | வினாக்களைத் தெளிவுறுத்தல்: வீட்டு வேலை: ஒப்படைகள்: கற்பித்தல் கருவிகளிலிருந்து வினாக்களுக்கு விடை கூறல். |
| 5′ | கடைசி வினாக்களைத் தெளிவுறுத்தல்; விடுப்புப் பெறுதல் | | |

சாம்பல் நிறம் = ஆசிரியர் பங்குபற்றும் செயற்பாடுகள்.